# 3.5 நிறைவானப் பெலன்

**வேத வசனம்:** என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு. பிலிப்பியர் 4:13

**அறிக்கை:** பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் என்னால் எல்லாவற்றையும் செய்ய முடியும்

**சத்தியம்:** பயப்படாதே, பெலன் கொண்டு திடமனதாயிரு. பரிசுத்த ஆவியானவரின் மேல் முழுமையாக சார்ந்து இருப்பவர்களால் எல்லாவற்றையும் செய்ய முடியும்.

## பாடக்குறிப்புகள்

- **எனது நற்குண பற்றாக்குறையை அறிதல்**
  - *ரோ 7:15, 18-19*
- **எனது பெலவீனத்தை அறிதல்**
  - *2 கொரி 12:10*
- **பரிசுத்த ஆவியானவரால் எல்லாவற்றையும் செய்தல்**
  - *பிலி. 4:13*
- **ஆவியானவரின் ஒரு முறை நிரம்புதல் அல்ல**
  - *எபே 5:18*

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *சிலர் வலுவான எண்ணத்துடனும் சிலர் பெலவீன எண்ணத்துடனும் இருப்பது ஏன்?*
- *வேதத்தில் உள்ள வல்லமை நிறைந்த மனிதரைப் பெயரிட்டுச் சொல்ல முடியுமா?*
- *பூரண மனநிறைவை நாம் அடைவது எப்படி?*

## வேதப்பகுதி

*ரோமர் 7:15-19*

## உடைக்கப்பட்ட நிலையில் பெலன்

என் மாம்சத்தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லை என்று பவுல் கூறினார். நன்மை செய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது. நன்மை செய்வதோ என்னிடத்தில் இல்லை. ஆகையால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல் விரும்பாத தீமையையே செய்கிறேன் என்று சொல்லுகிறார். எனினும் எப்போதும் தளராத ஒரு பெலனைப் பவுல் அனுபவித்தார். தேவன் நமக்குப் பெலன் தரக்கூடிய பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைக் கொடுத்திருக்கிறார். அதனை நாம் அவரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## செயல்

**ஆவியானவர் நமக்குப் பெலன் தருகிறார். நீங்கள் அடுத்தமுறை பயத்தையோ அல்லது கவலையையோ உணரும்போது தேவன் இலவசமாகத் தருகிற பெலனுக்காகவும் வல்லமைக்காகவும் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்.**

## சிந்திக்க:

*உங்கள் பெலவீனம் நற்குணம் பற்றாக்குறைவு ஆகியவற்றை அறிந்திருப்பது எவ்விதம் ஞானம் ஆகும்? பரிசுத்த ஆவியானவரின் கிரியையை உங்கள் சொந்த வாழ்வில் எவ்வாறு பார்த்திருக்கிறீர்கள்?*

______________________________

______________________________

## ஜெபம்:

*நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் நிறைக்கப்படவும் நம்பிக்கையடையவும் தேவன் உங்கள் இருதயத்தையும் எண்ணத்தையும் திறந்தருள வேண்டி ஒரு ஜெபத்தை எழுதுங்கள்.*

______________________________

______________________________